# பசுக்களைக் காப்போம்

## இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் வெளியிடும் பத்திரிகை அறிக்கை

சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை துயர் தடுப்புக் கழகத்தில் ஒப்படைக்கப்பட்ட 166 மாடுகள் தகுந்த உணவு மற்றும் குடிநீரின்றி தவிப்பதாக அந்த பகுதி மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். ஆந்திராவிலிருந்து கேரளத்திற்கு இறைச்சிக்காக ஆறு லாரிகளில் கொண்டு செல்லப்பட்ட 166 மாடுகள் வரை முறையின்றி உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாக தகவல் தெரிந்துள்ளது. லாரிகள் பறிமுதல் செயல்பட்டன. பொன்னேரி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையிலிடப்பட்டனர். ஒரு மாட்டிற்கு ரூ. 100/- வீதம் மாட்டு உரிமையாளர்களிடமே வசூல் செய்து கால்நடை துயர் துடைப்புக் கழகத்தினர் மாடுகளை பராமரித்து வருகின்றனர். ஆனால் அந்த மாடுகளை முறையாக பராமரிக்கவில்லை என்று சுற்று வட்டார மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். குடிநீர் மற்றும் உணவு வைப்பதில்லை. மாடுகள் இரவு பகல் பாராமல் கத்திக் கொண்டே இருக்கின்றன. சாணத்தால் பயங்கர துர் நாற்றம் வீசுவதுடன், கொசுக்களும் ஏராளமாக உருவாகி சுற்று வட்டார மக்களை பாடாய் படுத்துகின்றன என்று மக்கள் புகார் கூறுகிறார்கள். தமிழ்நாட்டில் 91 லட்சம் பசுக்கள் இருப்பதாக அரசு புள்ளி விபரம் (2004) தெரிவிக்கிறது. தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு கறவை மாடுகள் கொடுத்து பெரும் தொண்டு செய்துள்ளது. ஆனால் விவசாயிகள் சுமையாகக் கருதும் கறவை வற்றிய பசுக்கள் கசாப்புக்கு விற்கபடுகின்றன. அப்படிப்பட்ட பசுக்களை யார் பராமரிப்பது? செலவுக்கு எண்ண பண்ணுவது? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. இந்த பசுக்களை அறநிலையத்துறை ஏற்றெடுத்து பராமரிக்க வேண்டுமென்று பக்தர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆண்டுதோறும் மாட்டு பொங்கலன்று பூஜை நடத்தி அதில் ஆயிரக் கணக்கான பக்தர்களை அழைத்து, பக்தர்களிடமிருந்தே பசுக்களை பாதுகாக்கத் தேவையான நிதி கிடைத்துவிடும். இதற்கு சரியான திறமையான விளம்பரம் தேவை.கோவில்களில் தினந்தோறும் ஹோமங்கள் நடத்தும் பாரம்பரியத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் தூய்மையான விபூதியை (இரசாயனக் கலப்படமில்லாமல்) எல்லா பெரிய, சிறிய கோவில்களிலும் பிரசாதமாகக் கொடுக்கலாம். சிவன் கோவில்களில் இந்த தூய்மையான விபூதியை, கோவில்களில் கிடைக்கும் பசுஞ்சாணத்திலிருந்து இயற்கை உரம் தயாரிக்க முடியும். பசுஞ்சாண எரிவாயு, கருவிகளை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க முடியும். ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பசுக்களுக்கு தீவனம் தயாரிப்பதற்க்காகவே நிலம் ஒதுக்க வேண்டும். முற்காலம்போல மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை ஒதுக்க வேண்டும். அந்த இடங்களில் பசுப்பாதுகாப்பு இல்லங்களை உருவாக்க வேண்டும். பசுக்களுக்காக கூபா புல் போன்றவற்றை வளர்க்கலாம். இந்த தீவனங்கள் மகாத்மா காந்தி கிராம புனரமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நியாயவிலையில் வழங்கலாம். சென்னையை அடுத்துள்ள திருவள்ளூர் அலமாதி தீவன ஆராய்ச்சி மையத்தை விரிவுபடுத்தி விரும்புபவர்களுக்கு இயற்கை தீவனத்தை அளிக்கலாம். கோவையிலுள்ள விவசாய

பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிகள் நடத்தி ஊட்டச்சத்து நிறைந்த இயற்கை தீவனங்களை வழங்கலாம். அரிசி ஆலைகளிலிருந்து தவிட்டை அரசு விலைக்கு வாங்கி விவசாயிகளுக்கு கொடுக்கலாம். பஞ்ச கவ்யம், கோமூத்திரம் போன்றவற்றை விற்பனை செய்தால் கணிசமான நிதி கிடைக்கும். இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதின் மூலம் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு ஏற்பாடு செய்ய முடியும். காளைகள், பெட்ரோல், டீசல் விலை கட்டுமீறி செல்வதால், நவீன மாட்டுவண்டிகளை, பொருளை கொண்டு செல்ல பயன்படுத்தலாம். கோசாலைகளில் தயாரிக்கப்படும் விவசாயப் பொருள்களை காதி கிராமோத்யோக் மூலம் விற்க செய்யலாம். இயற்கை உரங்களை பயன்படுத்தி, உற்பத்தி செய்யும் பொருள்களையும் உணவுப் பொருளையும் விற்கலாம் தமிழ்நாட்டில் ஏராளமாக பால்பண்ணைகள் உள்ளன. அவர்களுடைய உற்பத்தியை தரக்கட்டுப்பாடு செய்து கறவை வற்றிய பசுக்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யலாம். இதனால் தமிழ்நாட்டில் வெண்மை புரட்சியை செயல்படுத்த முடியும். ஆவின் பால் கொள்முதல் நிலையங்களை மாவட்டந்தோறும் ஏற்படுத்தலாம்.

என்றும் தேசியப் பணியில்

இராம. கோபாலன்

இந்த அறிக்கையை தங்கள் பத்திரிகையின் அனைத்துப் பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.